முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1145

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.11.2022, வியாழக்கிழமை

1. ஓங்கார தவசியே அரங்கா வாழ்க
ஓங்காரக்குடில் படைத்த ஞானியே வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே உமக்கு
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் சுபகிருது தேள் திங்கள்
அரங்கனுக்கு பலம் கூட எடுத்துரைப்பேன்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 01 ம் நாள் 17.11.2022 வியாழக்கிழமை)
வாசிவென்ற ஞானியர்கள் எல்லாம்
வலம் வந்து அரங்கனோடு கலந்து நிற்க
3. நிற்கவே ஓங்காரக்குடில் என்பது
நிலவுலகின் ஞான சபையாகும் அற்புதம் மிகுந்த கைலாய நாதனும்
ஆறுமுகனும் ஐங்கரனும் ஐயமற தேவர் பெருமக்களும்
ஆசிதந்து அருளுகின்ற உயர் சபையாகும்
4. சபைதனில் அரங்கன் திருவடி
சாற்றிட பற்றி உலக மக்கள் சரணாகதி கொண்டு வருக
அபயமென அரங்கனை வணங்கி வர
அனைவருக்கும் ஞான சித்தி உறுதியாகும்
5. உறுதிகொண்டு அரங்கன் தர்ம வழியும் உயர்வான ஞான வழியையும்
கருதி வந்து உலகோர் பின்பற்றி கருணைகொண்டு அரங்கன் தர்மத்தை
தர்மத்தை உலக சேமமாக செய்து
தரணி எங்கும் அன்னதான சக்தி பெருக்க
6. பெருக்கவே கர்மவினைகள் எல்லாம்
பேருலகை விட்டு தர்மத்தின் பலத்தால் விலகி
ஆறுமுக அரங்கன் தயவாலே
அகிலமே அற்புதம் காணக்கூடும்
7. கூடுமப்பா அரங்கனால் பெருமாற்றம்
குவலயம் கண்டு இனிதே
நாடெங்கிலும் ஞான யுகமாற்றமாக
ஞானிகள் ஆட்சிக்காலமாக மாறுதல் காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–